**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் RRAN நிதியீட்டத்துடன் அமைக்கப்பட்டு வந்த கட்டட நிர்மாணப் பணிகளில் எமது சங்கத்தின் கடந்தகால, நிகழ்கால அங்கத்தவர்களால் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகத் தற்போதைய (2007/2008) ஆட்சிக் குழுவினரது உத்தியோக பூர்வமான நிலைப் பாடு குறித்து 06.01.2008 நடைபெற்ற ஆட்சிக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம்.**

1. கடந்தகாலச் செயற் குழுக் கூட்ட அறிக்கைகள் அனைத்தையும் வரிக்கு வரி ஆராய்ந்ததில், இவ்வாறானதொரு குற்றச்சாட்டு, இதற்கு முன்பிருந்த எந்தவொரு ஆட்சிக் குழுவினராலும் அறிக்கைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2. கடந்த ஆண்டு (2007) ஆகஸ்ட் மாதம் தெரிவு செய்யப்பட்ட நடப்பு ஆட்சிக் குழு எந்தச் சந்தா்ப்பத்திலும் இவ்வாறானதொரு குற்றச்சாட்டைத் தனது அங்கத்தவா்கள் மீது சுமத்தியதேயில்லை.

3. அநாமதேயமாக நடாத்தப்பட்ட இணையத்தளப் பரப்புரைகள், துண்டுப் பிரசுரப் பரப்புரைகள், வாய் வழி-செவி வழிக் கதைகள் அவற்றை மேற்கொண்ட அநாமதேயமான நபா்களின் தனிப்பட்ட கருத்துக்களேயன்றி, எந்தவொரு ஆட்சிக் குழுவினதும் உத்தியோக பூா்வமான நிலைப்பாடாக இருக்கவில்லை.

4. யாவற்றிற்கும் மேலாக, அப்போதைய (2003) யாழ். மாவட்ட அரசாங்க அதிபா் திரு.C.பத்மநாதன் அவா்களால் 20.10.2003 திகதியிட்டு, யா.இ.க.ப.மா.ச செயலாளரிற்கு முகவரியிடப்பட்ட JF/DRCC/JH/99 இலக்க கடிதத்தின் படி

   அ) இக் கட்டட நிர்மானத்திற்கென 1999ம் ஆண்டிலிருந்து 2002ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில், RRAN நிதியிலிருந்து ரூபா.13,983,325/- (பதின்மூன்று மில்லியன், தொளாயிரத்து எண்பத்து மூன்றாயிரத்து, முந்நூற்று இருபத்தைந்து ரூபா) யாழ். ப.நோ.கூ சங்கத்தினரிற்கு வழங்கப்பட்டுள்ளது.

   ஆ) மேற்படி கட்டட வேலைகளை மதிப்பீடு செய்த பொறியியலாளரின் அறிக்கையின் பிரகாரம் கடிதத் திகதி வரையில் ரூபா.14,806,351.47 (பதின்னான்கு மில்லியன், எண்ணூற்றநாராயிரத்து, முந்நூற்று ஐம்பத்தொரு ரூபா நாற்பத்தேழு சதம்) மதிப்பிடப்படக் கூடிய நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

5. தற்போதைய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபா் திரு.K.கணேஷ் அவா்களால் 08.12.2005 திகதியிடப்பட்டு, யா.இ.க.ப.மா.ச தலைவரிற்கு முகவரியிடப்பட்ட JF/DRCC/JHC/99 இலக்க கடிதத்தின் பிரகாரம், மேற்படி கட்டட வேலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தனக்கு எதுவித ஆட்சேபணையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மேற்படி விடயங்கள் அனைத்தையும் கருத்திற் கொள்ளும் போது, இக் கட்டட நிர்மாணத்தின் போது, எமது சங்கத்தின் கடந்தகால, நிகழ்கால அங்கத்தவா்களால் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான எதுவிதமான ஆதாரங்களும் இல்லை என்பது தெளிவாகின்றது. மேலும் இரு வேறு அரச அதிபா்களின் கடிதங்கள் இவ்வாறான முறைகேடுகள் நடைபெறவில்லை என்பதற்கான ஆதாரங்களாக அமைகின்றன.

7. எனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்பதுடன், இவை எந்தவொரு ஆட்சிக் குழுவினதும் உத்தியோகபூா்வமான கருத்துக்களாகப் பதிவு செய்யப்படவுமில்லை என்பதனால், அவற்றைத் தனிப்பட்ட சில நபா்களின் கருத்துக்களாகவே கருத வேண்டும்.

சி.சுந்தரேஸ்வரன்
**செயலாளர்**
ஆட்சிக் குழுவின் பணிப்பின் படி.